# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2111/44 - 2019 පෙබරවාරි මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.02.21

*2111/44 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு மண்சரிவினால் இடம்பெயர்ந்துள்ளவர்களுக்காக குடிநீர் வசதியினை வழங்குவதன் பொருட்டு நீர் சுத்திகரிப்பு அலகினை மற்றும் நீர்த்தொட்டி ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக் காட்டப்பட்டுள்ள காணிப் பகுதியின் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, லக்திய மெதுர, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, பெப்புருவரி 15,
5/2/2/1423.

**அட்டவணை**

கேகாலை மாவட்டத்தில், அரணாயக பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 44ஏ, ஹபலக்காவ கிராம அலுவலர் பிரிவில் ஹபலக்காவ கிராமத்தில் அமைந்துள்ள கொபேகடுவஹேன என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 20 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-

வடக்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி ;
கிழக்கு : வரைபடப் படியெடுப்பு இலக்கம் : KE/ARN/2016/392 இன் துண்டிலக்கம் M மற்றும் J ;
தெற்கு : 3 அடி அகலமான ஒற்றையடிப்பாதை ;
மேற்கு : 3 அடி அகலமான ஒற்றையடிப்பாதை.

காணிக்கு உரிமைகோருகின்றவர்களின் பெயரும் முகவரியும் : (1) திருமதி எம். ஷமிலா திஸாநாயக,
இல. B/18/1, மாதிலிய,
ஹெம்மாத்தகம.

03-357


1A – G 29518 – 39 (2019/02)



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு ஹெம்மாத்தகம நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் கெவிலிபிடிய நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, லக்திய மெதுர, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, பெப்புருவரி 15,
5/2/2/1424.

**அட்டவணை**

கேகாலை மாவட்டத்தில், அரணாயக பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 45D நாரங்கம்மன பிரிவில் நாரங்கம்மன கிராமத்தில் அமைந்துள்ள - அபதெனிய கெவிலிபிடீய என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 40 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-

வடக்கு : தெபிலி அபேவத்த ;
கிழக்கு : தெபிலி அபேவத்த மற்றும் தோட்ட வீதி ;
தெற்கு : தோட்ட வீதி ;
மேற்கு : குறித்த காணியின் மீதமாயுள்ள பகுதி.

காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் : பிரதம நிறைவேற்று அதிகாரி,
கேகாலை பெருந்தோட்ட நிறுவனம்,
அரணாயக்க

03-358

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.